# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 06.04.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக்கண்ணன், இ.கா.ப (ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். SA 1521/SCIC/2023</u>

திரு.N.கோபாலன், மேல்முறையீட்டாளர்
63-E, வெள்ளாள தெரு
ஸ்ரீ கணேசன்ஸ் ஹாஸ்பிட்டல் எதிரில்
அயனாவரம், சென்னை-600 023.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

## <u>ஆணை</u>

1.இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 30/12/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **“பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களை ஆணையம் பரிசீலனை செய்கையில், ஆவணங்களின்படியான, உரிய தகவல் மனுதாரருக்கு அளிக்கப்பட்டதாக பதிவு செய்து, ஏற்கிறது. எனினும், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 27/09/2022 தேதியிட்ட மனுவிற்கு, உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.சுதாகர், (தற்போது) வட்டாட்சியர், சிப்காட், பிள்ளைபாக்கம், ஸ்ரீபெரும்புதூர் அவர்கள் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன திரு.சுதாகர், (தற்போது) வட்டாட்சியர், சிப்காட், பிள்ளைபாக்கம் அவர்கள் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய**

பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்சொன்ன திரு.சுதாகர், (தற்போது) வட்டாட்சியர், சிப்காட், பிள்ளைபாக்கம் அவர்களிடமிருந்து காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தைப் பெற்று, அதனை 19/02/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.

மனுதாரர், தனக்கு 1950-1951 ஆண்டைய ஒப்படைப்பு விவரங்கள் (Assignment Details) அளிக்கப்படவில்லை எனப் புகார் தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய விவரங்கள் தமது அலுவலகப் பராமரிப்பில் இல்லை என்றும் சைதாப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகப் பராமரிப்பில் உள்ளது எனவும் தெரிவித்தார். எனவே, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள், மேற்சொன்னவாறு சைதாப்பேடை வட்டாட்சியர் அலுவலகத்திலோ அல்லது எந்த அலுவலகத்தில் உள்ளதோ அங்கிருந்து மனுதாரர் கோரிய 1950-1951 ஆண்டைய ஒப்படைப்பு விவரங்களைப் (Assignment Details) பெற்று, அதனை மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு, சைதாப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வேறு எந்த அலுவலகத்திலும், மேற்குறிப்பிட்ட விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை எனில், அது குறித்த பிரமாணப் பத்திரத்தை (Sworn Affidavit), சைதாப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களிலிருந்து பெறுவதோடு, தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும், அவ்வாறான பிரமாணப் பத்திரத்தை (Sworn Affidavit), அவற்றை மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன அனைத்து நடைமுறைகளையும், 45 நாட்களுக்குள் நிறைவேற்றுவதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை ஆணையத்தில் 19/02/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்."

2. மேற்குறிப்பிட்டவாறு 19/02/2026 அன்று திரு.எஸ்.கார்த்திகேயன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு.சுதாகர், (தற்போது) வட்டாட்சியர், சிப்காட், பிள்ளைபாக்கம், ஸ்ரீபெரும்புதூர் அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கக் கேட்புக் குறிப்பாணைக்கான 18/02/2026 தேதியிட்ட விளக்கத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தில் '*மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட விவரங்கள் குறித்த பதிவறையில் உள்ள கோப்புகளை ஆய்வு செய்ததில் கிடைக்கப் பெறாமல் இருந்துள்ளதால் மனுதாரருக்கான பதிலறிக்கை அளிக்க இயலாமல் இருந்துள்ளது. இத்தகவல் மனுதாரருக்கு தொலைபேசி வாயிலாகவும் நேரடியாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*' எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஆணையம் உத்தரவிட்டவாறு 1950-1951 ஆண்டைய ஒப்படை விவரங்களைப் (Assignment Details) பொறுத்த வரையில், அவ்விவரங்கள் ஸ்ரீபெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படவில்லை என்பது குறித்து, மனுதாரருக்கு அனுப்பி வைத்த பிரமாணப் பத்திரத்தின் (Sworn Affidavit) நகலினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் விசாரணையின் போது ஸ்ரீபெரும்புதூர் என்பதற்கு பதிலாக சைதாப்பேட்டை என்று தவறுதலாகக் குறிப்பிட்டுவிட்டதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகலையும் சமர்ப்பித்துள்ளார். ஆகவே, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு.சுதாகர், (தற்போது) வட்டாட்சியர், சிப்காட், பிள்ளைபாக்கம், ஸ்ரீபெரும்புதூர் அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கக் கேட்புக் குறிப்பாணைக்கான விளக்கத்தை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மேலும், அன்னார் மீது எவ்வித மேல்

**நடவடிக்கையும் தேவையில்லை என ஆணையம் முடிவு செய்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-பி.தாமரைக்கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1521/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

2. திரு.சுதாகர்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) வட்டாட்சியர்,
சிப்காட், பிள்ளைபாக்கம், ஸ்ரீபெரும்புதூர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.N.கோபாலன்,
63-E, வெள்ளாள தெரு
ஸ்ரீ கணேசன்ஸ் ஹாஸ்பிட்டல் எதிரில்
அயனாவரம், சென்னை-600 023.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

2. பதிவாளர் (for follow up)
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC